**Series ONS**

**SET-4**

**Code No. 6**

**Roll No.** | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **8** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **9** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்
# TAMIL

*கால அளவு : 3 மணி*
*Time allowed : 3 hours*

*மொ. மதிப்பெண்கள்: 100*
*Maximum Marks : 100*

## பகுதி-அ (50 மதிப்பெண்கள்)

1. (அ) கீழ்வருவனவற்றில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் உள்ள பிழைகளை திருத்தி எழுதுக. **5x1=5**

(i) ஆற்றில் தண்ணீர் குரைந்வுடன் ஓரிறு நாட்களில் தரைப்பாலம் அமைக்கப்படும்.

(ii) தினமும் நாலிதழ் படிக்கும் பலக்கத்தை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

(iii) வெள்ள நிவாரன நிதிக்கு அனைவரும் தாராலமாக உதவவேண்டும்.

(iv) உரக்கமின்றிஅவ்ன் இரவுமுழுவதும் விளித்துக் கொண்டிருந்தான்.

(v) உதவும் கறங்கள் ஒன்று சேர்கின்றன.

(vi) இந்திய இராணுவ தலபதி இளங்கை சென்றார்.

(vii) காள அலவு மூன்று மணித்துளிகள் ஆகும்.

(ஆ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக. **5x1=5**

(i) பாஞ்சாலி கண்ணனை பார்த்து, கண்ணா காப்பாய் ! என்று கூறினாள்

(ii) செப்பு திருமேனிகளின் பொற்காலம் என சோழர் காலத்தை குறிப் பிடலாம்.

(iii) ஆசிரியர் நடத்தா பாடத்திலிருந்து எந்த கேள்வியும் வரவில்லை.

(iv) இட பக்கம் உள்ள குதிரைக்கு தீனி போடு.

(v) உணவுபொருள்கள் தரைகுறவாக உள்ளன.

(vi) நல்ல நீதிகளைபுகட்டும் பாடல்கள் அறநெறி சாரத்தில் உள்ளன.

(vii) அகழ்வாரை தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரை பொறுத்தல் வேண்டும்.

(இ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக் கியங்களை கூறியவாறு மாற்றி எழுதுக. **5x1=5**

(i) பாஞ்சாலி சபதம் பாரதியாரால் இய்ற்றப்பட்டது. - (செய்வினையாக்குக)

(ii) என் உழைப்பால் வறுமை ஓடியது. - (பிறவினையாக்குக)

(iii) நாகம் இடியோசை கேட்டது; அதனால் நடுங்கியது. - (கலவை வாக்கியமாக்குக)

(iv) வளவன் தான் நாளை மதுரைக்குச்செல்வதாக என்னிடம் கூறினார்.(நேற்கூற்றாக்குக)

(v) திருக்குறள் ஒப்பித்தல் போட்டி டெல்லியில் நடந்தது. (செயப்பாட்டு வினையாக்குக)

(vi) இன்று என் பாடங்களை நன்றாக் படித்தேன். (எதிர் மறையாக்குக)

(vii) என்தாய் உண்பித்தாள் -(தன்வினையாக்குக)

2. (அ) கீழ்வரும் பத்தியைப்படித்து அதனைத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை தருக. **5x2=10**

"Add life to years; Not years to life" என்ற ஓர் ஆங்கிலப் பழமொழியை ஒரு நூலில் படித்தேன். ஆடிப்போனது மனது. ஆண்டுகளுக்கு உயிரூட்டுங்கள்; மாறாக வாழ்க்கைக்கு ஆண்டுகளைச் சேர்க்காதீர்கள்; என்கிற பொருளைத்தரும் இந்த பொன்மொழி நம்முடைய நாட்டிலுள்ள ஒருசிலருக்கு ஏற்றதாகும். வளர்ச்சி என்பது ஒரு சிலரது வாழ்க்கையில் உடலளவில் மட்டுமே நடைபெருகிறது. உள்ளத்தில் இல்லை. நீண்ட காலம் உயிர்வாழ்வது சாதனையல்ல! வாழும் நாட்களுக்கு உயிரூட்டுவது தான் சாதனை. அவரா ? நல்லது கெட்டது என்றால், இடுப்பில் துண்டைகட்டிக்கொண்டு முன்னிற்பாரே! எல்லோரிடமும் அவ்வளவு பிரியமாய் இருப்பாரே! அவரைப்போல வருமா? என்று பேச வேண்டும்.

ஒவ்வொருவரும் வாழும்போதே, ''என்ன உழைப்பு! எவ்வளவு திறமை! உழைப்பால் உயர்ந்த உன்னத மனிதரல்லவா! எப்பேர்ப்பட்ட உத்தமர் அவர்; தன்னை வள்ர்த்துக்கொண்டு பிறரையும் அல்லவா வளர்த்தார்'' என்று பேசும்படி வாழ வேண்டும்.

**வினாக்கள்.**

1. எது சாதனை ? எது சாதனையாகாது ? **2**
2. எப்பொழுது என் மனது ஆடிப்போனது ? **2**
3. ஆங்கிலப் பழமொழியின் பொருள் யாது ? **2**
4. ஒவ்வொருவரும் எவ்வாறு வாழவேண்டும் ? **2**
5. இப்பத்திக் கேற்ற தலைப்பொன்றை கொடு. **2**

(ஆ) கூகுள் தலைமை செயல் அதிகாரி சுந்தர்பிச்சையோடு நேர்காணல் செய்க. **5**

**அல்லது**

கீழ்வரும் பாடலை படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

உரைநடையின் சிக்கனந்தான் கவிதை; ஓங்கும்
உணர்ச்சிகளின் சிக்கனந்தான் அடக்கம்; காதல்
வரவேற்பின் சிக்கனந்தான் பெண்ணின் நாணம்;
மாளிகையின் சிக்கனந்தான் குடிசையாகும்;
உரிமைகளின் சிக்கனந்தான் சட்ட திட்டம்;
உணவுகளின் சிக்கனந்தான் பங்கீடாகும்;
அரசியலின் சிக்கனந்தான் இரண்டே கட்சி;
அனுபவத்தின் சிக்கனந்தான் நீதி நூல்கள். –கவிஞர் சுரதா

**வினாக்கள்.**

1. பங்கீடு என்பது எதனின் சிக்கனம் ? **1**
2. அனுபவத்தின் சிக்கனம் எது ? **1**
3. உணர்ச்சிகளின் சிக்கனம் எது ? கவிதை எதனின் சிக்கனம் ? **2**
4. இக்கவிதையின் ஆசிரியர் யார் ? **1**

**3.** கீழ்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பில் மூன்று பக்க அளவில் கட்டுரை வரைக. **10**

(i) ஒழுக்கம் விழுப்பந்தரும்

(ii) தேசிய மாணவர் படை

(iii) நீர் நிலைகளைப் பாதுகாப்போம்

4. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்துக் கடிதம் எழுதுக. **10**

உமது பகுதியில் ஒரு நூல்நிலையம் அமைத்துத் தருமாறு நூல்நிலைய இயக்குனருக்கு ஒரு விண்ணப்பம் வரைக.

**அல்லது**

நண்பனுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கூறி கடிதம் எழுதுக. (எக்கடிதமாயினும் உமது முகவரி : வளவன். 8 - பாரதி தெரு, பெரியார் நகர், சென்னை எனக் கொள்க)

## பகுதி-ஆ (50 மதிப்பெண்கள்)

5. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. **2x10=20**

(i) நாட்டையும் மொழியையும் கொண்டு சமரசத்துக்கு கேடு சூழ்பவர்களைப்பற்றித் திருவி.க.உரைப்பன யாவை ?

(ii) கவிதையின் இயல்பாக மேனாட்டறிஞர்கள் கூறும் கருத்துகளையும், அதற்குப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை உரைக்கும் மறுப்புகளையும் கட்டுரை வடிவில் வரைக.

(iii) நீதி கூறும்போதும் நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதனைச் சான்றுகளுடன் விளக்குக.

(iv) நம் தமிழ் மாந்தர் கடைபிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

6. கீழ்வரும் செய்யுட் பகுதியைப் படித்து தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக. **5**

''நின்றான், எழுந்து'' நிறைமதி வாண்முகம்
கன்றியது'' என்றவள் கண்ணீர் கையான் மாற்ற''

(i) இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது ? ஆசிரியர் யார் ? **2**

(ii) நின்றான் யார் ? அவன் கூறியது யாது ? **2**

(iii) நிறைமதி வாண்முகம் யார் ? **1**

**அல்லது**

'கயன் முள் ளன்ன நரை முதிர் திரைகவுட்
பயனின் மூப்பிற் பல்சான்றீரே'

(i) இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது ? ஆசிரியர் யார் ? **2**

(ii) இப்பாடலின் திணை எது ? துறை எது ? **2**

(iii) திரைகவுள் - பொருள்தருக **1**

7. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. **2x5=10**

(i) இறை வாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்திகளை கூறுக.

(ii) வினை முற்றிய தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லியதை விளக்கி வரைக.

(iii) சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகளை எடுத்தெழுதுக.

(iv) வினைதிட்பத்தின் சிறப்பும், அஃது உடையார் எய்தும் பயனும் குறித்தெழுதுக.

8. ‘பால்வண்ணம்பிள்ளை’– இச்சிறுகதையை அதன் கருப் பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக. **10**

**அல்லது**

பெற்றோரை கவனிக்காத மகனை சமூகம் மதிக்காது என்பதனை ‘மகன்’ என்ற கதை மூலம் ஆசிரியர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார் ?

9. மாலதியின் பண்பு நலன்களை எடுத்தெழுது. **5**

**அல்லது**

‘மூக்கப்பிள்ளை’ - இக்கதை மாந்தரைப் பற்றி திறனாய்க.